# உமார் கய்யாம்

# உமார் கய்யாம்

கவிமணி

சி. தேசிகவிநாயகம் பிள்ளை

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை
எழுதிய முன்னுரையுடன் கூடியது.

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு: நவம்பர், 1945
இரண்டாம் பதிப்பு: ஆகஸ்டு, 1951
மூன்றாம் பதிப்பு: மார்ச்சு, 1955
நான்காம் பதிப்பு: ஆகஸ்டு, 1960
ஐந்தாம் பதிப்பு: ஆகஸ்டு, 1965.

நூல்-உரிமை
கவிமணி அவர்களின் மருகர்
திரு. கே. குமாரசாமிப் பிள்ளை
அவர்களுக்கு உரியது.

விலை ரூ. 1-25

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14

# முன்னுரை

உமார் கய்யாம் பாரஸிக தேசத்தில் தோன்றிய பெருங் கவிஞர். இக் கவிஞரின் புகழ் நமது தமிழ் நாட்டிலும் பரவி வருகிறது. இவரது பாரஸிகப் பாடலைக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை மொழி பெயர்த்தது நமது பாக்கியம் என்றே கூற வேண்டும். தமிழ் நாட்டில் அவர் பெயர் என்றும் மங்காது ஒளிவிட்டுத் திகழும்படி செய்துவிட்டார் நமது கவிமணி. ஆங்கில உலகில் ப்விட்ஜிரால்ட் என்ன மதிப்பைப் பெற்றுள்ளாரோ அம்மதிப்பு நம் கவிமணி அவர்களுக்கும் உரியது. இவர் மூலமாய் நமது நாட்டில் உமார் கய்யாம் ஓர் அற்புதமான மறுபிறவியை எடுத்துள்ளார்.

இரான் தேசத்துக் கவிஞர்களுள் உமார் ஒரு சிறந்த கவிஞர் என்று கூடச் சொல்ல முடியாது. தம் காலத்தே இவர் பீஜ கணிதத்தில் ஒரு சிறந்த மேதாவியாகவும், ஜோதிஷத்தில் ஒரு நிபுணராகவும் புகழ் பெற்றிருந்தார். இவர் அராபி மொழியில் இயற்றிய பீஜ கணிதம், மிகப் பலவாய்ப் பிரதிகள் செய்யப்பட்டு, பலராலும் கற்கப்பட்டு வந்தது. இவர் இயற்றியுள்ள முகம்மதியப் பஞ்சாங்கம் கணிதத்தில் இவருக்கிருந்த பெருந்திறமையைக் காட்ட வல்லதென்பர். இவரது ஆழ்ந்த கல்வியறிவு முதலிய

வற்றையெல்லாம் தற்கால மக்கள் மறந்துவிட்டார்கள். மறவாது போற்றுவது எவற்றை என்றால், வாழ்க்கையைக் குறித்தும், அது பயனின்றி வறிதாயுள்ள தன்மையைக் குறித்தும் இவர் சிந்தித்து எழுதியுள்ள பாடல்களைத்தான். இவற்றிலே லட்சக் கணக்கான மக்களுடைய உள்ளத்தில் தோன்றும் சந்தாப உணர்ச்சி பிரதிபலிக்கிறது.

இக் கவிஞரது உண்மைப் பெயர் கியாதுடீன் அபுல்பாத் உமார். கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிஷபூர் என்ற நகரத்தில் இவர் பிறந்தனர். இவர் தமது பெயரோடு கய்யாம் என்பதையும் தாமே சேர்த்துக்கொண்டார். ‘கய்யாம்’ என்பதற்குக்‘கூடாரம் செய்பவன்’ என்று பொருள். இத்தொழில் இவரது தந்தைக்கு இருந்ததுபோலும். இவர் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது, இவரது பள்ளித் தோழர்களாய் இருவர் இருந்தனர். இவர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். தம்முள் யாரேனும் ஒருவர் உன்னத பதவியை அடைந்து செல்வர்களாய் விடுவார்களானால் அவர் மற்றை இருவருக்கும் உதவி செய்து, அவர்களைப் பதவியில் உயர்த்த வேண்டும் என்பது தான் அந்த ஒப்பந்தம். வியக்கத்தக்க முறையில் இந்த ஒப்பந்தம் நிறைவேறியது. ஒருவர் ஒரு மாகாணத்தை ஆளும் பதவியைப் பெற்றனர். உடனே இவர் அரண்மனை ஸர்வாதிகாரப் பதவியைத் தம் தோழர்களுள் ஒருவருக்குக் கொடுத்தனர். உமாருக்கு அவரது கணிதப் பயிற்சி இடை

யீடின்றி நடைபெற வேண்டும் என்று கருதி, ஆண்டு தோறும் ஒரு பெருந்தொகையைக் கொடுத்துக் கவலையின்றி வாழச் செய்தனர்.

இவ்வாருகப் பணக்கவலே யாதொன்றும் இல்லாதபடி உமார்கய்யாம் தம்முடைய நீண்ட ஆயுளே, கணிதம் முதலிய சாஸ்திரப் பயிற்சியில் செலவிட்டு வந்தனர். இடையிடையே மக்களுடைய இம்மை, மறுமை முதலிய பொருள்கள் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து அற்புதமானசெய்யுட்கள் பல இயற்றினர். இச் செய்யுட்களுக்கு 'ருபாயத்' என்று பெயர். 'ருபாயத்' என்ருல் நான்கடிச் செய்யுள் என்று பொருள்: தமிழிலுள்ள நாலடியார் என்ற நூற் பெயரை இதனேடு ஒப்பிடலாம்.

இவர் சிந்தித்துக் கண்ட முடிபு இன்ப உணர்ச்சியை விளேவிக்கத் தக்கதன்று. இவர் பாடல்களிலே வாழ்வுமுடிந்ததன்பின் மறுமையைக் குறித்து யாதும் உறுதியாகக் கூறமுடியாது என்ற கொள்கை தொனித்துக்கொண்டே யிருக்கிறது. இவ்வுலகத்தில் உண்பதும், குடிப்பதும், சுகித்து வாழ்வதும்தான் கைகண்ட பலனே என்று இவர் ஐயுறவு கொண்டனர். ஒரு சோக உணர்ச்சிதான் இவரது பாடல்களின் அடிநாதமாய் அமைந்துள்ளது.

இச் சோக உணர்ச்சியை இவரது அரிய கவிதை வாசிப்போர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் புகுத்தி, நிலேபெறச் செய்யவல்லது. எனினும்

ஒருசார் அறிஞர்கள், இச்சோக உணர்ச்சியில் ஈடுபடாது ஒன்றிலும் நம்பிக்கையற்றவன் இகழ்ந்து நகையாடும் அடங்காச் சிரிப்பொலியையும், மது, மங்கையரின்பம், மதுரமான பாட்டின்பம் இவற்றை வற்புறுத்தும் உபதேச ஒலியையும் இவர் பாடல்களில் கண்டனர். ஆனால், ஆன்மாக்கள் துடிதுடித்து வருந்தும் துன்ப நிலை இந்தப் பாரஸிகக் கவிதைகளிலே அங்கங்கே காணப்படுதல் உண்மை.

*வந்த வந்த மனிதரெலாம்*
*வளைவும் நெளிவும் கண்டுஎன்னைச்*
*சந்த மில்லாப் பானையெனத்*
*தள்ளி வைத்துச் சென்றனரால்;*
*அந்த நாள்அக் குயவன் கை*
*ஆட்டத் தாலே நேர்ந்தபிழைக்கு*
*இந்த நாளில் ஏழை எனை*
*ஏனோ குறைகள் கூறுவரே!*

*வழியிற் குண்டு குழிவெட்டி*
*வலையுங் கட்டி மதுவுண்டு,*
*விழுவோர் விதியும் அந்நாளே*
*விதித்து வைத்துஎன் கேடெல்லாம்*
*அழியாப் பாவம் அதனாலே*
*ஆன விளைவென்று அறைவாயோ?*
*தெளியாது உலகில்;என்றென்றும்*
*திகைத்து மறுகி நின்றேனே!*

நன்மையும், தீமையும் ஒருங்கு வாழும் இடமாக நம்மைப் படைத்துவிட்டு, நாம் செய்யும் தீமை

களுக்கு நம்மை இறைவன் தண்டிப்பது நீதியாகுமா என்று கவிஞர் கேட்கிறார்.

யாது சொன்னாய்? இன்னமுதம்
ஏந்தி உண்ட கலமதனை
மோதி உடைக்கும் அறிவில்லா
மூடன் எங்கும் உண்டுகொலோ ?
ஓதற் கரிய பேரருளால்
உவந்து கண்ட உருவமதைத்
தீதென் றெண்ணிச் சினம்பெருகிச்
சிதைக்கத் தெய்வம் துணிந்திடுமோ ?

வாழ்வின் ரகஸியங்களையெல்லாம் உமார் ஆழ்ந்து நெடுங்காலம் சிந்தித்துள்ளார். இன்பதுன்பங்களைக் குறித்து அவர் கூறுவதைக் கேளுங்கள் :

ஊனா ருடலம் இதுவீழின்
உண்டாம் வாழ்வின் நிலையறிய
ஆனா ஆசை மிகவேஎன்
ஆன்மா வினையான் வேண்டிநின்றேன்;
நானா உலகம் நெடுநாளா
நாடி யலைந்து வந்ததுதான்
'யானே சொர்க்கம் நரகமெலாம்'
என்றே கூறி நின்றதுவே.

துன்பம் வருதல் ஒருதலை என்பதும், அதனைத் தடுத்தல் இயலாது என்பதும் பின்வரும் செய்யுள் காட்டுகிறது.

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்;
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?

ஆனால், மரணத்தின் ரகஸியத்தையும் அதற்குப் பின் நிகழ்வதையும் குறித்து யாதும் தெரிய முடியாது என்கின்றனர் கவிஞர்.

மண்ணை வலமாய்ச் சுற்றிவந்தேன்;
வானும் அளந்து கணக்கிட்டேன்;
நண்ணும் வழியில் பலசிக்கல்
நாடி நன்கு விளக்கிவந்தேன்;
எண்ணும் மனிதர் தமையடையும்
இறப்பும் ஊழும் இவையென்று
திண்ண மாகச் சொல்ல எதும்
தெரியாது இங்கே திகைத்தேனே!

திட்டிக் கதவு தெரிந்ததடா!
திறவு கோலும் இல்லையடா!
கட்டித் திரையும் கண்டதடா!
கண்ணும் மயங்கி நின்றதடா!

ஒட்டிச் சிறிது நீநான் என்று
உரைத்த உரையும் கேட்டதடா!
நட்ட காலம் பின்னையடா!
நான்நீ யற்றுப் போச்சுதடா!

இவ்வாறு தெரியாததைத் தெரிந்தது போலப் பாசாங்கு பண்ணுவது உமாருக்கு வெறுப்பையே விளைத்தது. அறியாமையினூடே படாடோபமான வார்த்தைகளைப் பேசி நாம் நடிக்கிறோம். விஞ்ஞானம், தத்துவம் முதலியன எல்லாம் மறுமை பற்றிய அளவில் பயனற்றனவே.

அன்றென் இளமைப் பருவத்தில்
அறிவிற் சிறந்த புலவரையும்
நன்று சீல முடைய பெரு
ஞானி களையும் அடிபணிந்து
நின்று கேட்ட வாதங்கள்
நினைப்பின் அரிய ஆயிடினும்
சென்ற வாயில் வழியேதான்
திரும்பி அந்தோ வந்தேனே!

ஞானிகளாவது பிற பேரறிஞர்களாவது இதற்கு ஒரு முடிவு சொல்ல முடியுமா? முடியாது. அவர்களை இயற்கை இகழ்ந்து சிரிக்கிறது.

கொற்ற மன்னர் முடிசூடிக்
கொலுவில் அமர்ந்த திருக்கோயில்
முற்றுங் கூகை ஆந்தையொடு
முதுபேய் வாழும் காடாமே!

வெற்றி வில்லை ஏந்திமுனம்
வேட்டை செய்த வேடன் கை
பற்றி நரிகள் இழுப்பதையும்
பாரில் கண்ணுல் பார்ப்போமே!

ஆனுல், மனிதன் செய்யக்கூடியது ஒன்று உண்டு. மரணத் தறுவாயிலே, மனத்திட்பத்தோடு, யாராலும் துணிய முடியாத அந்த மறுமையில் யாதுதான் உள்ளதென அறிய, அவன் தைரியத்தோடு செல்லக்கூடும். இவ்வாறு செல்வது அவனிடத்துள்ள தெய்வத் தன்மையை வெளிக் காட்டுகிறது.

ஆனுல், இந்த மண்ணுலகத்திலே எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்ற உணர்ச்சி ஏன் நமக்கு உண்டாக வேண்டும்? மண்ணுலகத்திற்கு அப்பால் ஏன் அத்தனை ரகஸியம் சூழ்ந்து கொண்டிருக்க வேண்டும் ? எல்லாம் வல்ல இறைவன், அவரது கருத்தை நமக்கு உணர்த்தி, நம்மையும் தமது ரகஸியத்திற் பங்குகொள்ளச் செய்திருக்கக் கூடாதா? நாம் இந்த உலகத்தில் பிறக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டோமா? இதைவிட்டு நீங்க வேண்டும் என்று சொன்னேமா? இல்லை. நம்மை எங்கிருந்தோ இவ்வுலகில் தள்ளி, இங்கும் அங்குமாக அலைத்து இழுத்துச் சிறிதும் ஈவு இரக்கமின்றி நம்மை வெளியே ஏன் எறிந்துவிட வேண்டும்? இதை நினைத்த உடனே நமது உள்ளத்தில் துக்கம் பீறிட்டெழுகிறது.

## முன்னுரை

என்னைக் கேளாது எங்கிருந்தோ
இங்கே தூக்கி எறிந்திட்டான்;
என்னைக் கேளாது இன்னுமவன்
எங்கே தூக்கி எறிவானோ?
என்ன செய்வேன்? இக் கொடுமை
ஏழை உள்ளம் மறந்தொழிய
வன்னக் கிளியே ஒருகிண்ணம்
மதுவை ஊற்றித் தருவாயே.

எல்லாம் இங்கோர் சூதாட்டம்;
இரவும் பகலும் மாறாட்டம்;
வல்லான் விதியே ஆடுமகன்;
வலியில் மனிதர் கருவிகளாம்;
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்,
ஜோடி சேர்ப்பான், வெட்டிடுவான்,
செல்லா தாக்கி ஒவ்வொன்றாய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான்.

இறைவன் தலையிடாதபடி நம்மையே இச் சூதாட்டத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி விட்டிருப் பானானால், திருப்திகரமான ஒரு முடிவைத் தேடி யிருப்போ மல்லவா ?

அன்பே யானும் நீயும் இசைந்து
அயலில் எவரும் அறியாமல்
வன்பே உருவாம் விதியினையும்
வளைத்துள் ளாக்கி முயல்வோமேல்,

துன்பே தொடரும் இவ்வுலகைத்
துண்டு துண்டாய் உடைத்துப்பின்
இன்பே பெருகி வளர்ந்திடுமோர்
இடமாய்ச் செய்ய இயலாதோ?

இந்நிலையில் மனிதன் என்னதான் செய்யக் கூடும்? மதுபானம் செய்து, அறிவை மயக்கி அதில் மூழ்கிக் கிடப்பதுதான் அவன் செய்யக் கூடியது. உறுதியாக ஒன்றுதான் உள்ளது. அது யாது என்றால், நிகழும் நிமிஷம்தான். வாழ்வு சிறிது காலம் தான்; முடிவு நெருங்கி வருகிறது. அந்தக் காலத்தை வீண் போக்காது இன்ப நுகர்ச்சியில் கழித்தல் வேண்டும். புகழ் வேண்டாம்; செல்வம் வேண்டாம்; அதிகாரம் வேண்டாம். இந்திரிய சுகங்களை, இப்பொழுதே சக்தி இருக்கும் வரை, கைப்பற்ற வேண்டும். இந்த உபதேசத்தில் வாழ்விற் காணும் தோல்வியும் துன்பமும் இவற்றை மூழ்கடிப்பதற்கு வேண்டும் எக்களிப்பும் தெளிவுறுத்தப்படுகின்றன.

ஒழிந்த பாழில் ஒரு கணமாம்;
உயிர்வாழ் உலகில் ஒரு கணமாம்;
வழிந்து விண்ணின் மீன்களெல்லாம்;
மங்கி மங்கி மறைந்தனவே.
அழிந்த பாழின் உதயங் கண்டு
அறியச் செல்வோர் அனைவருமே
எழுந்து நின்றார்; கண்டிலையோ?
எழுவாய்! எழுவாய்! எழுவாயே!

## முன்னுரை

வாராய் நண்பா, வருத்தமெனும்
வாடைக் காலப் போர்வையினை
நேரா வருமிவ் வசந்தமெனும்
நெருப்பில் வீசி எறிவாயே!
தேரா வாழ்வின் பறவைஇனும்
செல்லும் தூரம் சிறிதேயாம்.
பாராய்! பாராய்! பறவை அதோ
பறக்கச் சிறகும் விரித்ததடா!

மதுவில் மகிழ்ந்த மக்களுக்கு இறுதிக்காலம் வரும் பொழுது அவர்கள் சூனியத்தைச் சந்திப்பதற்குச் செல்லலாம். இங்கே வாழ்ந்து தயங்கிக்கொண்டிருப்பவர்கள் மதுக் கிண்ணத்தில் ஒன்றுமில்லாது உறிஞ்சிக் குடிக்கும் வரையில் உயிர் தாங்கட்டும். வாழ்வின் ரஸத்தை முழுவதும் நுகர்ந்து அதைச் சக்கையாகச் செய்துவிடட்டும்.

வாழ்வு பற்றிய இக் கொள்கை நம் மனத்தைக் கவர்கிறது. ஆனால், இது வெகு அபாயகரமாகவும் உள்ளது. உய்யும் நெறி காணாது தவிக்கின்ற, ஒரு மனப்பான்மையிலிருந்து இக் கொள்கை பிறந்துள்ளது. இக் கொள்கையைப் பின்பற்றினால், உலக மக்கள் மிருகப் பிராயமாய் முடிந்து விடுவார்கள். நாகரிகமும் மக்களுடைய இன்பமும், தனக்குரிய பொறுப்பை உணராதிருக்கும் ஒருவனது மன நிலையை அடிப்படையாகக் கொண்டு, பிறப்பன அல்ல.

என்றாலும், உமார் கய்யாம் சிலசில உண்மைகளின் அடி நிலத்தைத் தொட்டுவிடுகிறார். இவ்வுல

கத்திலே நம்மை மயக்கி ஈடுபடும்படியாகச் செய்கின்ற அற்பப் பொருள்களுக்கு நாம் முயன்று வருவதைக் கண்டு உமார் நகையாடுகிருர். உலகத்திலுள்ள சமயங்கள் ஒவ்வொன்றிலும் இவ் வுண்மை வெளியிடப்பட்டுள்ளது. ஆனுல், 'மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும்பொழுது இறைவனை நினைக்க மறந்துவிடாதே' என்று இச் சமயங்கள் வற்புறுத்துகின்றன.

வாழ்க்கைத் தத்துவத்தைக் குறித்து, உமார் கய்யாம் கொண்டுள்ள கொள்கை எவ்வாருயினும், அவரது கலையுணர்ச்சி அதியற்புதமாக உள்ளதென்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். விஷயங்களைச் சுருக்கிக் கூறும்பொழுது உண்மையில் ஒளி பரவும்படி செய்யும்ஆற்றல், உண்மையைக் காணும் உள்ளுணர்ச்சி, பல்வேறு சிந்தனைகளை மனத்திலே குறிப்பாய்த் தோற்றுவிக்கும் பாவனு சக்தி, உலகப் பொதுமையாயுள்ள உணர்ச்சிகளும் கருத்துக்களும், தம் கருத்துக்களை எதிரேற்றுக் கொள்ளும்படியாகச் செய்யும் ஆற்றல்: இவைகள் எல்லாம் உமாரின் கவித்வப் பெருமையை நன்ருக உணர்த்துகின்றன. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் அழகிய கவிதையிலும் அப்பெருமை நன்ருகப் புலப்படுகிறது.

காந்தி நகர், 22-2-'51 } **எஸ். வையாபுரிப் பிள்ளை**

# உமார் கய்யாம்

காலைச் சிறுவன், கல்லினைஅக்
கங்குற் பானை யகமிட்டான்;
நீல வானின் மீனெல்லாம்
நில்லா தோடி ஒளித்தனவே!
தாலத் தொருகீழ்த் திசைவேடன்
தாங்கும் கதிரின் கண்ணிகளால்,
சீலக் கோமான் திருக்கோயில்
சிகரம் கொண்டான், காணீரோ! 1

அருணன் உதிக்கும் வேளையிலே
ஆரோ அந்தச் சாலையிலே,
'மருவும் வாழ்வின் கிண்ணமது
வற்றி வறண்டு போகும்முனம்,
பருக மதுவைத் தாரீரோ?
பாய்விட் டெழுந்து வாரீரோ?
அருமை மங்கை மாரே!' என்று
அழைத்தல் கேட்டேன், அறிவீரே. 2

காகம் கரைதல் கேளீரோ?
கதவைச் சற்றே திறவீரோ?
ஆக இரண்டு கணப்பொழுதுக்கு
அப்பால் இங்கே தங்கோமே;
தேகம்அலுத்துச் செல்வோமே!
சென்ருல் மீண்டு வாரோமே;
வாகின் அமைந்த சாலேஇதன்
வாயில் காக்கும் காவலரே! 3

புலர்ந்து விடியும் பொழுதினிலே;
பொய்கைக் கரையஞ் சோலேயிலே,
மலர்ந்து நல்ல மணம்வீசி
மகிழும் மலர்கள் ஆயிரமாம்;
உலர்ந்து வாடிச் சேற்றினிலே
உதிருமவையும் ஆயிரமாம்;
கலந்த உலக வாழ்வைஇதில்
கண்ணுற் கண்டு தெளிவாயே. 4

மலர்ந்து நல்ல மணம்வீசி
வையம் புகழ வாழாமல்,
உலர்ந்து வீழும் அரும்புகளிவ்
உலகில் யாரே எண்ணிடுவார்?
கலந்த திருவும் யௌவனமும்
கண்ணுக் கினிய மெய்யழகும்
குலைந்து போகும் என்றறிஞர்
கூறும் கூற்றில் ஐயமுண்டோ? 5

பல நூல் கற்ற பண்டிதர்கள்
பலரும் சபைகள் பலகூடிக்
கலகம் வாதம் செய்திடுக;
கண்டங் கிழிய முழங்கிடுக;
மலரும் மலர்கள் வாடலும்இவ்
வாழ்வு நிலையா தோடலுமே
உலகம் கண்ட உண்மைகளாம்;
உண்டோ மற்றென்று உரைத்திடவே? 6

சிரித்த ரோஜா மலரைப்பார்,
செப்பும் இனிய மொழியைக்கேள்;
'அருத்தி யோடிவ் வுலகில்வந்து
அழகார் நந்த வனமதிலே,
பரித்த பட்டுப் பைகீறிப்
பைம்பொன் நிதியைப் படிமீது
விரித்து வீசி எங்கெங்கும்
விதைத்துச் செல்வேன்' என்றிடுமே. 7

நினைப்பு நீண்டு தழைத்துவரும்;
நீறி வெந்து சாம்பருமாம்;
அனைத்தும் பாலை வனத்தினிலே
அமையும் பனிபோல் அரைநொடியில்,
மனத்தில் தோன்றி நிலையாது
மாண்டு மறைதல் உண்மையதாம்;
எனைத்து நூலின் வலியாலும்
இதனை மறக்க இயலாதே. 8

வாராய் நண்பா! வருத்தமெனும்
வாடைக் காலப் போர்வையினை,
நேரா வருமிவ் வசந்தமெனும்
நெருப்பில் வீசி எறிவாயே
தேரா வாழ்வின் பறவை,இனும்
செல்லுந் தூரம் சிறிதேயாம்;
பாராய்! பாராய்! பறவை, அதோ
பறக்கச் சிறகும் விரித்ததடா! 9

ஒழிந்த பாழில் ஒருகணமாம்;
உயிர்வாழ் உலகில் ஒருகணமாம்;
வழிந்து விண்ணில் மீன்களெலாம்
மங்கி மங்கி மறைந்தனவே.
அழிந்த பாழின் உதயம்கண்டு
அறியச் செல்வோர் அனைவருமே
எழுந்து நின்றார் கண்டிலையோ?
எழுவாய்! எழுவாய்! எழுவாயே! 10

வாரி வாரிக் கொடுத்தவரும்
வழங்கி டாது வைத்தவரும்
பாரில் மண்ணாய்ப் போனதலால்,
பசும்பொன் னனது அறியோமே!
ஊரில் அவர்தம் உடலையெடுத்து
உரையும் நிறையும் காணூரே;
ஓரும் உள்ளத் துண்மையிதை
ஊன்றி நோக்கி உணர்வாயே. 11

வையம் பழைய அரண்மனையாம்;
வாயில் இரவு பகலேயாம்;
மெய்யின் இங்குக் கொலுவிருந்து
விதித்த காலம் அரசாண்டு,
செய்ய மணிமா முடிவீழச்
சென்ற மன்னர் எண்ணிலரால்;
ஐய! இதனை உள்ளத்தில்
ஆழ்ந்து காணல் அறிவாமே. 12

யானும் நீயும் இறந்தபினும்,
இராஜ ராஜன் பட்டபினும்,
ஊனம் இன்றி இவ்வுலகம்
ஊழி ஊழி நின்றிடுமால்;
கூனக் கிழவி ஒருசிறுகல்
குனிந்து வீசி எறியில், அதை
மானக் கடலும் மரந்தரமா
மலையென் றெண்ணி மலைந்திடுமோ? 13

கொற்ற மன்னர் முடிசூடிக்
கொலுவில் அமர்ந்த திருக்கோயில்,
முற்றுங் கூகை ஆந்தையொடு
முதுபேய் வாழும் காடாமே:
வெற்றி வில்லை ஏந்திமுனம்
வேட்டை செய்த வேடன்கை
பற்றி நரிகள் இழுப்பதையும்
பாரில் கண்ணுற் பார்ப்போமே. 14

மன்னர் பட்ட படுகளத்தில்
மலரும் ரோஜா மலரைப்போல்,
வன்ன ரோஜா மலர்வேறு
வனத்தி லெங்கும் வளர்வதுண்டோ?
புன்னைக் கிளைகள் எழுந்தோங்கிப்
பூத்துச் சொரியும் புனிதநிலம்
கன்னி யொருத்தி முத்தாரம்
கிழன்று வீழ்ந்த இடமலவோ? 15

இருந்து சென்ற முன்னோரின்
இடத்தி லெல்லாம் யாம்இன்று
விருந்து செய்து வாழ்கின்றோம்;
விகடம் சொல்லி மகிழ்கின்றோம்;
இருந்த இடம்விட்டு யாமும்இனி
எழுந்து சென்றால் இங்கிருந்து
விருந்து செய்வார் யார்யாரோ?
விகடம் சொல்வார் யார் யாரோ? 16

போற்றும் இலங்கை அசோகவனம்
போன இடமும் எவ்விடமோ ?
சீற்ற அரக்கர் கோனும்,அவன்
செங்கை வாளும் எங்கேயோ?
ஏற்றும் திராட்சைக் கொடியின்னும்
இனிய மதுவைத் தந்திடுமே;
ஆற்றங் கரைப்பூஞ் சோலைமணம்
அல்லும் பகலும் வீசிடுமே. 17

பாயும் வாய்க்கால் அருகிலெழும்
பசிய கோரை அழகினைப்பார்;
சாயும் வேளை மெதுவாகச்
சாய்நீ, அப்பா! சொல்கின்றேன்:
ஆயின் இதுவும் முன்னுளோர்
அழகின் செல்வி அனுதினமும்
நேய மாக நெய்பூசி
நீட்டி வளர்த்த பூங்குழலே. 18

மண்ணில் மறையும் முடிமன்னர்
வாழ்வும் அரிய வாழ்வாமோ?
கண்ணிற் காணுச் சொர்க்கமுமோர்
கனவே யன்றி நனவாமோ?
நண்ணும் உன்கைப் பொருளதனை
நம்பி யிருநீ, நண்ணுதது
எண்ணி யெண்ணி எந்நாளும்
ஏங்கி யலேவது ஏன்? ஐயா! 19

இன்றைக் கின்றைக் கென்றேயாது
இரவும் பகலும் உழைத்திடுவீர்;
அன்றி நாளைக் காமெனவே
அலுப்பில் லாது முயன்றிடுவீர்;
ஒன்று சொல்வன் உண்மைமொழி
உறுதி யாகக் கொள்வீரே;
என்றும் மூடர் நன்மையுமக்கு
இங்கும் இல்லை அங்குமில்லை. 20

அன்றென் இளமைப் பருவத்தில்
அறிவிற் சிறந்த புலவரையும்,
நன்று சீல முடையபெரு
ஞானி களையும் அடிபணிந்து
நின்று கேட்ட வாதங்கள்
நினைப்பின் அரிய ஆயிடினும்,
சென்ற வாயில் வழியேதான்
திரும்பி அந்தோ! வந்தேனே. 21

அரிய பெரிய ஞானிகளோடு
அறிவின் விதைகள் விதைத்துவந்தேன்;
பெருகி ஞானம் வளர்ந்தோங்கப்
பேணிப் பணிகள் பலசெய்தேன்;
உரிய காலைக் கண்டபலன்
உண்மை கூறின் இதுவேயாம்;
வருதண் ணீரைப் போல்வந்தேன்:
மாயக் காற்றைப் போல் மறைந்தேன். 22

ஏனோ உலகில் வந்தேன்?முன்
இருந்த இடமும் எவ்விடமோ?
காணு ரோடும் கதியேபோல்,
கண்ட கண்ட படிபோனேன்;
வானேக் கியபாழ் நிலமீது
வழங்கும் வாடைக் காற்றெனவே,
யானோர் காலை வெளியேறில்
எங்கே குவனோ? அறியேனே. 23

மலையில் ஏறி நிற்கின்றோம்,
மறிந்து கடலில் வீழ்கின்றோம்;
சுலவு புயலில் அகப்பட்டுச்
சுழன்று சுழன்று செல்கின்றோம்;
அலையில் நுங்கும் நுரையுமலால்
அடைந்த பயன்வே றொன்றுமிலை.
உலகின் உண்மை இதுவல்லால்
உரைக்க வேறொன் றுண்டோ? சொல். 24

மண்ணை வலமாய்ச் சுற்றிவந்தேன்,
வானும் அளந்து கணக்கிட்டேன்;
நண்ணும் வழியில் பலசிக்கல்
நாடி நன்கு விளக்கிவந்தேன்;
எண்ணும் மனிதர் தமையடையும்
இறப்பும் ஊழும் இவையென்று,
திண்ண மாகச் சொல்லஎதும்
தெரியா திங்கே திகைத்தேனே. 25

திட்டிக் கதவு தெரிந்ததடா!
திறவு கோலும் இல்லையடா!
கட்டித் திரையும் கண்டதடா!
கண்ணும் மயங்கி நின்றதடா!
ஓட்டிச் சிறிது நீநானென்று
உரைத்த உரையும் கேட்டதடா!
நட்ட காலம் பின்னையடா!
நான் நீ அற்றுப் போச்சுதடா! 26

பாரின் மீது கவிழ்த்தஒரு
பானை யாமிவ் வானகமே;
சாரு மிதன்கீழ் எவ்வுயிரும்
தங்கி வாழ்ந்து மறைந்திடுமால்;
யாரும் இதனை நோக்கிவரம்
இரந்து வேண்டி நிற்பாரோ?
தேரின் இதுவும் நம்மைப்போல்
திகைத்தெந் நாளும் சுழன்றிடுமே. 27

இருளில் ஏகும் மக்களெலாம்
இடறி வழியில் வீழாமல்,
அருளி அழைத்துச் செல்லவிதிக்கு
அளித்த தீபம் யாதென்றேன்;
உருளும் வானம் எனைநோக்கி,
'உணர்ந்தும் உணரா உணர்வென்னும்
மருளி ஞானம் உளது' என்ன
மாற்றம் தந்து சென்றதம்மா! 28

மண்ணை ஒருநாள் ஒருகுயவன்
மயக்கிப் பிசையும் வேளையிலே
திண்ணை யருகு சென்றிருந்தேன்
செய்யுந் தொழிலும் கண்டிருந்தேன்;
'அண்ணு மெல்ல மெல்ல' என—
அமைந்த அழுகைக் குரல்கேட்டேன்,
கண்ணிற் காணு நாவாலே
களிமண் கரைவது எனவுணர்ந்தேன். 29

ஊனுர் உடலம் இதுவீழின்
உண்டாம் வாழ்வின் நிலையறிய,
ஆனு ஆசை மிகவேஎன்
ஆன்மா வினையான் வேண்டிநின்றேன்:
நானு வுலகும் நெடுநாளாய்
நாடி யலைந்து வந்ததுதான்
"யானே சொர்க்கம் நரகமெலாம்'
என்றே கூறி நின்றதுவே. 30

வழியிற் குண்டு குழிவெட்டி,
வலையுங் கட்டி, மதுவுண்டு,
விழவோர் விதியும் அந்நாளே
விதித்து வைத்து, என் கேடெல்லாம்,
அழியாப் பாவம் அதனாலே
ஆன விளைவென்று அறைவாயோ?
தெளியாது உலகில் என்றென்றும்
திகைத்து மறுகி நின்றேனே! 31

இற்ற மண்ணால் மனிதனையும்
எழுப்பி ஈடன் ஆளவிட்டுச்
சுற்றும் அரவும் அவ்விடத்தே
சூதாய்ப் பதுங்க வைத்தவனே;
முற்றும் பாவி எனஅவன்தன்
முகத்தில் கரியைப் பூசியஅக்
குற்றம் நீங்க மன்னிப்புக்
கொடுத்து நீயும் பெறுவாயே. 32

மண்ணில் உடைந்து மண்ணுக
 மாறி மண்ணில் மறைந்திடுமே;
மண்ணிலிருந்து மண்ணெடுத்து
 வனைந்து வைத்தான் இவ்வுடலை;
எண்ணி இதனை அறியாதார்;
 ஏதும் அறியார்; இவ்வுலகில்
நண்ணும் வினைகண்டு, அஞ்சிநிதம்
 நடுங்கி நடுங்கி நலிபவரே. 33

மண்ணிற் செய்த கலமுடையின்
 மண்ணில் மண்ணுய்ப் போகுமென,
எண்ணி முன்னுள் அக்குயவன்
 எனையும் மண்ணில் வனைந்தனனுல்;
உண்மை இதனை உள்ளத்தில்
 ஊன்றி உணரா மாந்தரெலாம்
வெண்மை பேசித் திரிபவரே;
 வீணுய் வாதம் செய்பவரே. 34

படைத்த மண்ணும் நல்மண்ணோ?
பழுது நிறைந்த பொய்மண்ணோ?
படைத்த மண்நல் மண்ணுனல்,
பானை உடைந்து போவதுமேன்?
படைத்த மண்ணில் பழுதுளதேல்
பழிதான் எவரைச் சார்ந்ததுவாம்?
படைத்த படைப்பின் உண்மையெலாம்
பாரில் யாரே பகர்ந்திடுவார்! 35

வந்த வந்த மனிதரெலாம்
வளைவும் நெளிவும் கண்டென்னைச்
சந்த மில்லாப் பானையெனத்
தள்ளி வைத்துச் சென்றனரால்;
அந்த நாள் அக் குயவன்கை
ஆட்டத் தாலே நேர்ந்தபிழைக்கு
இந்த நாளில் ஏழைஎனை
ஏனோ குறைகள் கூறுவரே? 36

மன்னும் ரம்ஸான் முடிவினிலே,
　　மாலைப் பொழுதில், வான்மீது
சின்ன மதிவந் தெழுமுன்னம்,
　　சேரிக் குயவன் கடைதன்னில்,
வன்னப் பானை சட்டியெலாம்
　　வைத்த அறையின் நடுவேயான்
தன்னந் தனியே போய்நின்ற
　　சரித மிதனைக் கேளாயோ? 37

கண்ணிற் கண்ட அற்புதமாம்;
　　காதிற் கேட்ட மொழியேயாம்;
மண்ணிற் செய்த கலமொன்று
　　மாய மாக வாய்திறந்து
'வண்ணக் கலமிங் கெவரேயாம்?
　　வனைந்த குயவன் யாரேயாம்?
எண்ணி யறிந்து விடைதருவார்
　　யாவருள்ளார்?' என்றது, அம்மா! 38

உண்ட வெறியில் முன்னொருநாள்
உண்ட கலத்தை உடைத்தெறிந்தேன்;
துண்டு துண்டாய்ப் போனகலம்
துணிந்து மெல்ல எனைநோக்கிப்
'பண்டு யானும் உன் வாழ்வைப்
பாரில் அடைந்தேன்; நீயுமெனக்கு
அண்டும் அந்த வாழ்வைஇனி
அடைவாய், உண்மை' என்றதடா! 39

நலஞ்செய் பன்னீர் நாடியொரு
நந்த வனத்தை நானடைந்தேன்;
உலர்ந்து வெந்து கரிந்தங்கோர்
உரோஜா நின்ற நிலைகண்டு,
'கலந்த நோயும் யாது?' என்றேன்;
காதில் மெல்ல, 'யான் முன்னம்
மலர்ந்த முகமாய் விளையாடி
வாழ்ந்த இடமீது' என்றதம்மா! 40

வசந்த ருதுவும் வந்திடுமோ?
வாச மலர்கள் பூத்திடுமோ?
கசிந்து பாடும் குயில்இன்னும்
காது குளிரச் செய்திடுமோ?
இசைந்த இளமைப் பருவத்தின்
இனிமை இனியும் எய்துவனே?
அசைந்த உள்ளம் தேறுமொழி
ஆரே கூற வல்லாரே? 41

இருளின் வாயிற் படிதாண்டி
எமக்கு முன்னே சென்றவர்கள்,
கருது கோடி கோடியின்மேல்
கணக்கில் லாதார் ஆயிடினும்
ஒருவ ரேனும் வழியிதுவென்று
உண்மை கூற வந்தனரோ?
அரிய வழியை நாமும்இனி
அளந்து காண வேண்டுமடா! 42

நெஞ்சே! நீயும் எத்தனைநாள்
நெருப்பில் மூழ்கி நின்றிடுவாய்?
வஞ்ச உலகில் மற்றெவையும்
மறந்து நீக்கி யறவிட்டுத்
தஞ்ச மாக நட்பொன்றும்,
தழைக்கும் ரோஜா வனமொன்றும்,
விஞ்ச மதுவுண் கலமொன்றும்,
விரும்பி வேண்டிப் பெறுவாயே. 43

அன்பே! யானும் நீயும் இசைந்து
அயலில் எவரும் அறியாமல்,
வன்பே உருவாம் விதியினையும்
வளைத்துள் ளாக்கி முயல்வோமேல்,
துன்பே தொடரும் இவ்வுலகைத்
துண்டு துண்டாய் உடைத்துப்பின்
இன்பே பெருகி வளர்ந்திடுமோர்
இடமாய்ச் செய்ய இயலாதோ? 44

மண்ணுக் கீடு பொன்கேட்டால்
வலியில் மனிதர் என்செய்வார்?
கண்ணிச் செய்த ஒப்பந்தம்
கண்ணிற் கண்டது ஒன்றுமிலை;
திண்ண மாக இவ்வழக்குத்
தீரா வழக்கே யாகும், அப்பா!
எண்ணி முடிவு செய்திடுவார்
யாவர் உள்ளார்? எங்குள்ளார்? 45

எல்லாம் வலியாய், நின்வலிதான்
எங்கும் வெளியாம் வேளையிலே,
நல்லாறு அறியா நாத்திகரும்
நம்பி உனையே நாடிடுவார்;
வில்லார் கதிரோன் விண்ணின்று
விளங்கி ஒளியைப் பொழிகையிலே,
பொல்லா வாவல் இருள் நோக்கிப்
போக வழிதான் கண்டிடுமோ? 46

'யாரும் சிறியர்; யான்பெரியன் ;
எதிலும் சிறந்தது என்னலமாம்;
பாரில் எனக்கீ டில்லை' எனப்
பயனில் மொழிகள் பகர்வதும்என்?
சேரும் உலகப் பொருளையெலாம்,
தெரிய நோக்கித் தனைநோக்காச்
சீரின் அமைந்த கண்மணியின்
செயலை நோக்கித் தெளிவீரே. 47

அல்லும் பகலும் பலநூல்கள்
ஆய்ந்து கற்றேன்; அவையாவும்
வெல்லும் வெற்றி ஈகையினுல்
விளைந்த புகழை விரித்ததலால்,
தொல்லை ஆன்ம நிலையிதெனச்
சொன்ன சொற்கள் ஒன்றுமிலை,
கல்லும் முள்ளும் கடந்துழன்றும்
கனியைக் கண்ணுல் கண்டிலனே! 48

ஐயோ அறியா மானிடரே!
ஆசைப் பேயின் அடிமைகளே!
எய்யா தென்றும் வான்நோக்கி,
இரங்கி அழுது நிற்பதும் ஏன்?
மெய்யாய் அன்று படைத்தஅவன்
மெலியாது உம்மைக் காவானே?
கையால் மரத்தை நட்டவர்கள்
கருத்தாய் நீரும் வார்க்காரோ? 49

'ஈசா! உள்ள மிரங்கிடு; யான்
ஏழை, ஏழை' என்றுநிதம்
கூசா தேனே கூப்பிடுவாய்?
குறைகள் கூறி நின்றிடுவாய்?
பேசா தவரைப் பேணானே?
பெற்ற மகவைக் காவானே?
ஆசான் நீயோ? ஈசனெதும்
அறியாச் சிறிய பாலகனே? 50

நாடும் வெற்றி தோல்விகள்ளெந்
நாளும் பந்து விரும்பிடுமோ?
ஆடு மவரின் அடிக்கேற்ப
அங்கும் இங்கும் அலைந்திடுமால்;
நீடும் இந்த நிலமீது
நின்னைத் தூக்கி இட்டஅவன்
ஈடு செய்வான், இரங்கிடுவான்,
யாவும் அறிவான், நன்கறிவான். 51

எல்லாம் இங்கோர் சூதாட்டம்,
இரவும் பகலும் மாறுட்டம்;
வல்லான் விதியே ஆடுமகன்,
வலியில் மனிதர் கருவிகளாம்;
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்,
ஜோடி சேர்ப்பான், வெட்டிடுவான்;
செல்லா தாக்கி ஒவ்வொன்ருய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான். 52

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்;
தொழுது கெஞ்சி நின்ருலும்,
சூழ்ச்சி பலவும் செய்தாலும்,
வழுவிப் பின்னுய் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ? 53

உயிரின் ஒளியும் மணமுமெலாம்
உன்பே ரருளில் உதிப்பனவாம்;
மயலின் மாசு நீங்கிடவே
வறுமை சூழ வைத்தனைநீ,
எயிலும் அரணும் காப்பதிலுன்
இணையா மடிகட்கு இணையாமோ?
அயலும் காவா மனிதருலகு
அனைத்தும் காக்கும் ஆண்டவனே! 54

புந்தி ஈசன் திருவடியிற்
பொருந்தா உலகம், பொய்யுலகம்,
முந்து துயரம் மூடுலகம்,
மூட உலகம், எந்நாளும்
வெந்து தீயும் நரகினுக்கு
விறகு தேடி இடுமுலகம்:
இந்த உலகில் ஏன், ஐயா,
இன்னும் ஆசை வைப்பாய்நீ? 55

வீடும் பழவீ டாகுதடா!
விட்டம் கூரை சுவரெல்லாம்
ஆடி அலைந்து விழுநாளும்
அண்டி அண்டி வருகுதடா!
நாடி இதனை இன்னும்நீ
நம்பி மோசம் போகாமல்,
பாடிப் பாடி, எம்பெருமான்
பாதம் போற்றி வாழ்வாயே. 56

இந்த உலகிற் பாவமிலார்
யாரும் ஒருவர் உளரோ? சொல்,
இந்த உலகில் பாவமிலாது
இருந்து போக வழியுண்டோ?
சிந்தை கலங்கித் தவறிடுமேல்
தெய்வ அருளும் தவறிடுமோ?
சிந்தை மங்கி மழுங்கிடுமேல்,
தெய்வ ஒளியும் மழுங்கிடுமோ? 57

மண்ணிற் பாவம் செய்யாத
மனிதர் ஒருவர் உண்டோசொல்?
மண்ணிற் பாவம் செய்யாது
வாழும் வாழ்க்கை எளிதோசொல்?
மண்ணிற் பாவம் செய்தவரை
மாறு நரகில் இடுவாயேல்,
மண்ணில் உன்னைப் பெருங்கருணை
வள்ளல் என்பது இசைவாமோ? 58

பாவம் செய்தோம் என்றிந்தப்
பாரில் வருந்திப் பயன்உண்டோ?
பாவம் செய்யா தீசனருள்
பாலித் திடுதல் அறிவோமோ?
பாவ மன்னிப் பில்லையெனில்,
பாவச் செயலிங்கு உளதாமோ?
பாவம் செய்தோ மென்றுஏனோ
பதறிப் பதறி நடுங்கிடுவீர்? 59

மானை வளர்த்த கையாலே
வஞ்சப் புலியும் வளர்த்திந்தக்
கானில் வேட்டை காணுமவர்
கருணை உடையவர் ஆவாரோ?
ஞானக் கண்ணின் பார்வையிலே
நன்மை தீமை வேறுமோ?
தேனைப் பொழியும் சொல்லாய்! நீ
தெரிந்து கூற வேண்டுவனே. 60

ஈசன் அருளைப் பெறுவதிலும்
இடையே தரகர்க்கு இடமுண்டோ?
பேசின், இவர்செய் சூதுலகில்
பெரிய சூதென் றறியாயோ?
பூசு நீறும், கண்டிகையும்,
புரிமுந் நூலும் பூண்டதலால்,
காசு பணத்தின் ஆசையவர்
கடந்த தில்லை இல்லையடா! 61

தேடும் ஈசன் திருவடியிற்
சேர வழியொன் றுண்டு,அதனை,
நீடு வழியாய்ச் சிறுவழியாய்
நிகழச் செய்வோன் நீயேயாம்;
நாடுங் கோயில் மடங்களெலாம்,
நம்பன் அடியார் அவ்வழியில்
கூடித் தங்கும் நீழல்களாம்;
குடிக்கும் தண்ணீர்ப் பந்தல்களாம். 62

மண்ணை மண்ணில் உதறிவிட்டு,
மாசு மறுவொன் றில்லாமல்,
விண்ணிற் செல்ல வல்லதெனில்,
விளங்கும் ஆன்மா, இப்புவியில்
நண்ணி இந்த நாள்வரையும்
நலிந்து சிறையில் இருந்ததனை
எண்ணி வெட்கம் அடையாதோ?
இதன்மேல் வெட்கம் வேறுண்டோ? 63

காசு பணத்தைக் கண்டவர் ஆர்?
கண்டு கறங்கிச் சுழல்பவர் ஆர்?
பூசை பலவும் புரிபவர் ஆர்?
புரிந்து பிழைகள் செய்பவர் ஆர்?
நாச நரகை வகுத்தவர் ஆர்?
நரகை எண்ணி நலிபவர் ஆர்?
ஈச னருளை அறியாத
ஏழை மனித! நீயலவோ? 64

எண்ணில் சமய வாதியர்கள்
இருளில் அலைந்து திரிகின்றார்;
கண்ணில் காண்பது ஒன்றுமில்லை;
கையில் தீபம் ஏதுமில்லை;
விண்ணும் அதிர முழங்கிடுவார்
வீணாய்ச் சண்டை மூட்டிடுவார்;
மண்ணில் மனிதர் ஒற்றுமையை
வாளால் கீறி வகிர்ந்திடுவார். 65

மண்டும் சமய வாதிகளின்
வாயை மூடச் செய்வதெது?
அண்டும் மனித வாழ்விலே,
அமர வாழ்வு தருவதெது?
கண்டு மறவாக் காட்சிகளோர்
கணத்தில் காட்ட வல்லதெது?
உண்டு மகிழும் மதுவல்லால்,
உலகில் வேறோர் பொருளுண்டோ? 66

இருக்கும் காலம் சிறிதேயாம்;
　　இதனுள் இன்ப வாழ்வினையாம்
பெருக்கு மளவு பெருக்கிடுவோம்;
　　பிழையொன் றதனால் உண்டோ? சொல்.
உருக்கும் பாடல் கேளாமல்
　　உண்ணும் மதுவும் உண்ணாமல்
பொருக்கு மண்ணில் மண்ணாகப்
　　புதைந்து போனால் என்செய்வோம்? 67

மாண்டு போன மன்னரெலாம்
　　மண்ணில் மண்ணாய் மறைந்திடுக;
நீண்ட கதையால் ஒருவீமன்
　　நேர்ந்த படையை மோதிடுக;
வேண்டு பொருளை ஒருகர்ணன்
　　வேண்டி யாங்கு வழங்கிடுக;
ஈண்டு நீவந் தென்னுடனே
　　இனிய மதுவை உண்பாயே. 68

கான ரோஜா முகம்வெளிறிக்
கவிழ்ந்து நிற்றல் கண்டவொரு
வானம் பாடி மனம்உருகி
'மதுவுண், மதுவுண், மதுவுண்டால்
தீனம் நீங்கி உடல்தேறிச்
செம்மை யாக வளர்ந்திடுவாய்;
ஏனம் மா! நீ வாடுகின்ருய்?'
என்று கூறிச் சென்றதுவே. 69

உலகில் வாழும் இவ்வாழ்வின்
உண்மை யறியாக் குயவன்செய்
கலச வாயை என்வாய்தான்
கலந்து கொண்ட கதையிதுவாம்:
'உலக வாழ்வு நிலையில்லை
உண்இம் மதுவை உண்'எனவே
கலச வாய்என் வாயோடு
கனிந்த சொல்லைச் சொன்னது,அம்மா! 70

மன்னு மனிதர் 'வாழ்வுஎன்றும்
வழுவி வழுவிப் போகும்' எனச்
சொன்னார்: சொன்ன சொல்லையின்னும்
சொல்லிச் சொல்லிப் பயன்எதுவோ?
இந்நாள் இனிய நாளானால்,
இறந்த நாளுக்கு இரங்குவதேன்?
பின்னாள் எண்ணி நடுங்குவதேன்?
பெண்ணே! கிண்ணம் நிறையம்மா! 71

என்னைக் கேளாது எங்கிருந்தோ
இங்கே தூக்கி எறிந்திட்டான்;
என்னைக் கேளாது இன்னுமவன்
எங்கே தூக்கி எறிவானோ?
என்ன செய்வேன்? இக்கொடுமை
ஏழை உள்ளம் மறந்தொழிய,
வன்னக் கிளியே! ஒருகிண்ணம்
மதுவை ஊற்றித் தருவாயே! 72

அல்லும் பகலும் விவேகத்தால்
அடைந்த கவலைக் களவில்லை:
தொல்லை நீங்க இன்றவளைத்
துரத்தி விட்டுத் துணிவாகச்
செல்வி திராட்ச வல்லிதரும்
தெய்வ மகளை மணந்துகொண்டேன்;
இல்லை துயரம் இல்லையினி
இன்பம் என்றும் இன்பமதே. 73

உண்ணும் மதுவும், நீயுள்ளம்
உருகி முத்தம் இடுமுகமும்,
எண்ணும் பொருள்கள் முடிவதுபோல்
இன்மை யேயாய் முடிவுமெனில்,
மண்ணில் இந்நாள் நிலையும்இனி
வருநாள் நிலைபோல் இன்மையதாம்
திண்ணம் இந்த அளவினிலோர்
சிறிதும் குறையாது அறிவாயே. 74

இதற்கும் அதற்கும் எத்தனைநாள்
இரவும் பகலும் சண்டை?அப்பா!
புதர்க்குள் இல்லாக் கனிதேடிப்
புற்றில் நாக மணிதேடிப்
பதைத்து வீழந்து பயனுண்டோ?
பாரில் அமுத சுரபியினுள்
முதற்கு முதலாம் திராட்சையினை
முற்றும் நம்பி வாழ்வாயே. 75

மங்கும் மாலைப் பொழுதினிலே
மதுவின்சாலை வாயில்வழி
எங்கும் யான்கண் டறியாத
எழிலார் தெய்வ வடிவுடையோன்
தங்கக் கலசம் தாங்கிவந்தான்,
‘சற்றே பருகிப் பார்’ என்றான்;
எங்கும் கிடையா அவ்வமுதம்
இனிய திராட்சை ரசம்அப்பா! 76

நின்ற துயரம் நீங்கிடவே
நேருந் துயரம் மாறிடவே,
இன்றிக் கிண்ணம் நிறையஎனக்கு
இனிய மதுநீ வார்த்திடம்மா!
அன்றி நாளைக் கென்பாயேல்
அந்த 'நாளை' வருமுன்னம்
சென்ற கோடி ஆண்டுகளில்
சேர்ந்தொன் றாகிப் போவேனே. 77

அரிய இனிய குணமுடையர்
அறிவும் புகழும் மிகவுடையர்
மருவும் உலகம் மதிக்கவரு
மணியே போல்வார் பலநண்பர்,
பருகும் மதுவைச் சிறிதுமுனம்
பருகிப் பருகி மெல்ல எழுந்து
ஒருவர் ஒருவர் ஒருவராய்
உறங்க வீடு சென்றனரே. 78

அங்கவ் அயனும் தங்கவொட்டான்
அஞ்சல் வழியிங்கு அனுப்பிடுவான்;
இங்கு யமனும் இருக்கவொட்டான்
யார்சொன் ஞலும் விடமாட்டான்;
அங்கு மிங்கு மாகஅலைந்து
அயர்ந்து வாடி அலுப்புற்றேன்;
இங்கு மங்கும் எங்குமுளோய்
ஏழை என்னைக் காப்பாயே. 79

ஒருகை அன்னம் இடமாட்டான்;
ஊரூ ராகத் துரத்திடுவான்;
பருக நீரும் தரமாட்டான்;
பழியில் மூழ்கச் செய்திடுவான்;
இரவும் பகலும் ஓயாமல்
என்னை மானம் கெடுத்திடுவான்;
கருணை யில்லாக் காலனவன்
காட்டும் கொடுமை சிறிதளவே! 80

உண்ணும் உணவை அழித்திடுவான்;
　　உடலை மெலியச் செய்திடுவான்;
கண்ணுக் கினிய ஆடையினைக்
　　கந்த லாகக் கீறிடுவான்;
பண்ணற் கரிய மாளிகையும்
　　பாழ்மண் ணுகக் கண்டிடுவான்;
எண்ணிற் காலன் கொடுமையெலாம்
　　யாரே கூற வல்லவராம்? 81

வாடி நித்தம் வருந்திடினும்
　　வயிற்றுக் குணவு தரமாட்டாய்;
தேடி வைத்த பொருளையெலாம்
　　திருடிக் கொண்டு போய்விடுவாய்;
ஆடிச் சுழலும் ராட்டினமும்
　　ஆடைக் குதவு நூல்தருமே;
நீடு காலச் சக்கரமே!
　　நின்னல் ஏதும் பயனுண்டோ? 82

ஏழை ஒன்றை எண்ணுகின்றேன்,
ஈசன் ஒன்றை எண்ணுகின்றான்;
ஏழை எண்ணம் இந்நிலையில்
என்றும் நிறைவு கண்டிடுமோ?
ஏழை வாழ்வை யன்றிஎதும்
ஈசன் எண்ணான் ஆதலினால்
ஏழை எண்ணம் நிறைவேறாது
இருத்தல் அன்றோ நலம்,ஐயா! 83

தேறா உலகின் மாற்றமெலாம்
தேறும் உண்மை ஞானியர்கள்,
மாறா இன்ப துன்பத்தால்
மயக்கம் கொள்வது என்றுமிலை;
கூறாய் இன்பம் மறைவதுபோல்
குறைந்து மறையும் துன்பமுமே;
ஆறாப் புண்ணும் உலகிலில்லை;
ஆற்ற மருந்தும் அதற்கில்லை. 84

அன்பு செய்யின் அயலாரும்
அண்டி நெருங்கும் உறவினராம்;
அன்பு நீங்கின் உறவினரும்
அகன்று நிற்கும் அயலாராம்;
துன்ப நோயை நீக்கிடுமேல்
துவ்வா விடமும் அமுதாகும்;
துன்ப நோயை ஆக்கிடுமேல்
தூய அமுதும் விடமாமே. 85

யாது சொன்னாய்? இன்னமுதம்
ஏந்தி உண்ட கலமதனை
மோதி உடைக்கும் அறிவில்லா
மூடன் எங்கும் உண்டுகொலோ?
ஓதற் கரிய பேரருளால்
உவந்து கண்ட உருவமதைத்
தீதென் றெண்ணிச் சினம்பெருகிச்
சிதைக்கத் தெய்வம் துணிந்திடுமோ? 86

மறந்த துள்ளம் பிறந்ததென
வசந்த காலம் வந்ததிதோ!
சிறந்த மலர்கள் மலர்ந்துமரம்
தெய்வ மணமே கமழ்ந்திடுமால்;
இறந்த புல்லும் இருநிலமீது
எழுந்து கொழுந்து விட்டிடுமால்;
துறந்த ஞானி தனிமையிடம்
துருவிச் செல்வது ஏன்? ஐயா! 87

குழியுங் குண்டும் அடர்ந்திடும்இக்
குவல யத்தில் யான்செல்லும்
வழியும் செம்மை வழியேயாம்;
மற்றவ் வழியை நோக்கிடும்உன்
விழியின் வளைவே வளைவெல்லாம்;
விரைந்தவ் வளைவை நீக்கிஎனைப்
பழிவெம் பாவம் அணுகாமல்
பாது காப்பாய் போதகனே! 88

மோசக்காரன் பொன்னன்[1] அப்பா;
முத்தம் மாள்[2] ஓர் வேசி, அப்பா!
ஆசை காட்டி இழுத்துன்னை
ஆழக் குழியில் வீழ்த்திடுவார்;
'பாசம்' 'நேசம்' என்பதெலாம்
பாசாங் கன்றி வேறில்லை;
ஈசன் அடியை மறவாமல்
என்றும் ஏத்தி வாழ்வாயே. 89

ஆவித் துணையே! அருட்கடலே!
அருளால் அருள்செய் ஆண்டவனே!
பாவி எனக்குன் அருள் நோக்கம்
பாலித் திடுதல் ஆகாதோ?
மேவும் அரிய புண்ணியமாம்
விலைகொண் டதனை விற்பாயேல்,
யாவர் உய்வர்? இவ்வுலகில்
ஏழை மக்கள் என்செய்வார்? 90

---

1. பொன்னன்-பொன். 2. முத்தம்மாள்-முத்து.

நாடும் ஈசன் பாவிகளை
நரகில் வீழ்த்தி விடுவானென்று
ஏடு நிறையப் பண்டிதர்கள்
எழுதி வைத்துப் போய்விட்டார்;
ஈடி லாத அவனருளை
என்றும் அன்பால் உள்ளுருகி
ஆடிப் பாடும் அடியரலால்
அயலார் அறிய வல்லாரோ? 91

வைய மிசையுன் னடிபற்றி
வாழும் அடியார் தமையேநீ
உய்ய வைத்தல் செய்வேலைக்கு
உதவு கூலி யாம்; எவரும்
செய்யொ ணாத பழிபாவம்
செய்த பொல்லா நீசரையும்
ஐய மின்றி ஆளுதலே
அருளாம்; எங்கள் பெருமானே! 92

தண்ணூர் மதியும் புரிசடையும்
 தாங்கும் தையல் பாகனென
எண்ணு தொருவன் சொன்னதுகேட்டு
 எவனே சொன்னன்; அதனைக்கேட்டு
அண்ணு சொன்னன்; அதுபோலின்று
 அடுத்த தம்பி சொல்கின்றன்:
கண்ணல் ஈசன் திருமேனி
 கண்டார் எவரும் உண்டோ? சொல். 93

நாடும் தெய்வம் இதுவென்று
 ஞாலத் தறிய முயல்கின்றர்;
தேடித் தேடிப் பார்த்ததெலாம்
 திரைமேல் வந்த திரையாகும்;
வாடி வாடி நோற்றதெலாம்
 வாளுள் வீணுள் ஆனதுவே;
பாடிப் பாடிப் பெற்றதெலாம்
 பகலிற் கனவு கண்டதுவே. 94

எங்கும் மனிதர் உனைத்தேடி
இரவும் பகலும் அலைகின்றார்;
எங்கும் உள்ளது உன்வடிவாம்;
எனினும் குருடர் காண்பாரோ?
எங்கும் எழுவது உன்குரலாம்;
எனினும் செவிடர் கேட்பாரோ?
எங்கும் என்றும் எவ்வுயிரும்
யாவு மான இறையவனே! 95

ஆல யங்கள் ஏனய்யா!
அபிஷே கங்கள் ஏனய்யா,
கோலங் கொடிகள் ஏனய்யா!
கொட்டு முழக்கம் ஏனய்யா!
பாலும் பழமும் வைத்து நிதம்
பணிந்து நிற்ப தேனய்யா!
சீலம் பேணும் உள்ளத்தைத்
தெய்வம் தேடி வாராதோ? 96

என்னை நோக்கி எதிர்வந்தான்,
　　யானும் நிலனை நோக்கிநின்றேன்;
என்னை முத்த மிடவந்தான்,
　　யானும் நழுவ வழிபார்த்தேன்;
இன்னும் நிற்பான் என்றிருந்தேன்;
　　இமைப்பின் ஓடி மறைந்திட்டான்;
இன்னும் தேடி அலைகின்றேன்;
　　எங்கும் காணேன்; என்செய்வேன்? 97

ஏது ஏது மில்லாமல்
　　என்னைத் தனியே வைத்தாய்நீ;
தூதின் வரவு காணுமல்
　　தூண்டிற் புழுவாய்த் துடிக்கின்றேன்;
நீதி இதுவோ? நெறியிதுவோ?
　　நீசெய் குறையை நிறைசெய்ய
ஓது வாழ்நாள் நீண்டிடுமோ?
　　உள்ளம் இதனை உணராதோ? 98

என்றும் என்றும் என்குறைகள்
இரவும் பகலும் ஆராய்வேன்;
அன்றி அயலார் குறைகாணில்
அடைத்துக் கண்ணை மூடிடுவேன்;
இன்றிவ் உலகின் கொடுமையெலாம்
இதயம் பிளவு செய்திடுமால்;
ஒன்றி யிங்கு வாழ்வதிலும்
ஓடி ஒழிதல் நலமாமே. 99

எண்ணி எண்ணி என்குறைகள்
ஏனோ நிதமும் கூறிடுவர்?
பண்ணுஞ் செயல்கள் பழித்திடுவர்;
பாவி என்றுந் தூற்றிடுவர்;
மண்ணில் யானோர் ஒளிவட்டம்;
மற்றவ் வட்டம் நோக்கிடுவோர்
கண்ணிற் காண்பது அவரவர்தம்
காட்சி யல்லால் வேறுமோ? 100

‘சின்னஞ் சிறியன்; மதுவுண்டு
திரியும் லோலன்’ என்றுள்ளம்
கன்னக் கன்னப் பேசிஎனைக்
கலங்கச் செய்வர் கருணையிலார்;
அன்னை! அப்பா! நின்கோயில்
அடிமை யாக அணுகியபின்,
என்னை யானும் அறிவேனோ?
யான்செய் கருமம் எனதேயோ? 101

உன்னை உள்ளின் என்னுளத்தே
ஊக்கம் பெருகும் ஐயமில்லை;
உன்னை யல்லால் ஒருவரையிவ்
உலகில் நோக்கும் ஆசையிலேன்;
உன்னை நோக்கி என்முகமங்கு
ஒளிரக் கண்டு மகிழ்ந்திடுவேன்;
என்னை நோக்கி என்னுள்நீ
இருத்தல் கண்டு வாழ்த்திடுவேன். 102

நண்ணும் உயிருக் குயிர்நீயாம்;
நாடும் அன்பு நீயேயாம்;
கண்ணும் மணியும் நீ யேயாம்;
கருத்துள் ஒளியும் நீயேயாம்;
பண்ணின் சுவையும் நீயேயாம்;
பாவின் நயமும் நீயேயாம்;
எண்ணின் நீயல் லாதபொருள்
யாதும் உண்டோ இவ்வுலகில்? 103

ஓதும் வேதம் ஒன்றுமில்லை;
உருட்டும் மணிதாழ் வடமில்லை;
ஆதி கோயில் தேடிநிதம்
அங்கும் இங்கும் அலைவதில்லை;
சாதி இல்லை; மதமில்லை;
தாரணி மீதோர் ஆசையில்லை;
யாதும் கவலை இல்லை; எனக்கு
யாரே நிகராம் இவ்வுலகில்? 104

படுவெம் பாலை ஒருபுறமும்,
பயிர்வாழ் நன்செய் ஒருபுறமும்
நடுவண் ஒடுங்கி ஓடுமொரு
நந்த வனமும், அவ்வனத்தில்
அடிமை அரசர் இவரில்லாது
அமையும் அரிய நல்வாழ்வும்,
உடைமை யாகப் பெறுவேனேல்,
உம்பர் நாடும் வேண்டேனே. 105

வெய்யிற் கேற்ற நிழலுண்டு;
வீசும் தென்றல் காற்றுண்டு;
கையில் கம்பன் கவியுண்டு;
கலசம் நிறைய மதுவுண்டு;
தெய்வ கீதம் பலவுண்டு;
தெரிந்து பாட நீயுமுண்டு;
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ? 106

*பொல்லான் என்பர்; அதனுலென்?*
*புனிதன் என்பர்; அதனுலென்?*
*கல்லான் என்பர்; அதனுலென்?*
*கலைஞன் எனபர்; அதனுலென்?*
*சொல்லா வசைகள் சொன்னுலென்?*
*சூழ்ந்து நின்று புகழ்ந்தாலென்?*
*எல்லா நாளும் ஒருநாள்போல்*
*இருக்க வேண்டும் என்மனமே.* **107**

*'புயலே யனைய கொடையாளர்,*
*புவன மடங்காப் புகழுடையார்,*
*இயலும் கல்விக் கிணையில்லார்'*
*எனவே தத்தம் முன்னோரின்*
*செயலும் குணமும் சிறப்பும்அனு*
*தினமும் மிகவே போற்றிடுவீர்;*
*வயலைப் பயிர்செய் யாதுபழ*
*வைக்கோல் கிண்டிப் பயன்எதுவோ?* **108**

துயரம் அடர்ந்து வளர்ந்துன்னைச்
சுற்றி வளையும் வேளையிலே,
முயலும் முயற்சி யின்றி, ஒரு
மூலை தேடி இருப்பதும்ஏன்?
அயலி லுள்ளார் படும்பாடு,
அழுகண் ணீரும் கண்டு,உனது
மயலை முற்றும் மாற்றுவையே;
மனத்தை நன்ருய்த் தேற்றுவையே. 109

நண்ணும் உடைமை யாவையும்நீ
நாசஞ் செய்து நாடுவையேல்,
உண்மை யாக உன்னையுமே
உணர்ந்து கொள்வாய், ஐயமில்லை;
மண்ணின் ஆசை நீங்கின்,அருள்
வள்ளல் ஆசை ஓங்கிவரும்;
எண்ணும் உள்ளத்து ஆசையிரண்டு
இருக்க இடமும் உண்டோடா? 110

உருளும் உலகில் ஒருநாளும்
    ஒன்றும் நிலையில் நிற்பதில்லை;
மருளும் மனிதர் வாழ்க்கைஒரே
    வழியிற் செல்வ துண்டோ?சொல்.
பொருளை நோக்கிப் புகழ்விடுவார்;
    புகழை நோக்கிப் பொருள்விடுவார்;
அருளை நோக்கி இவைவிடுவார்
    அரியர், என்றும் அரியர் அம்மா! 111

ஆழி சூழும் உலகாளும்
    அரச ஞக வேண்டுமெனில்,
வாழும் வாழ்வில் உன்னையும்நீ
    மறந்து வாழ வேண்டுமடா!
ஏழை யாகி எளியவரின்
    எளிய ஞக வேண்டுமடா!
தோழ ஞகி யாவர்க்கும்
    தொண்ட ஞக வேண்டுமடா! 112

இல்லாப் பொருளுக் கேங்காமல்
இருக்கும் பொருளும் எண்ணுமல்
எல்லாம் வல்ல எம்பெருமான்
இரங்கி அளக்கும் படிவாங்கி,
நல்லார் அறிஞர் நட்பையும்நீ
நாளும் நாளும் நாடுவையேல்,
நில்லா உலகில் நிலைத்த சுகம்
நீண்டு வளரும் நிச்சயமே. 113

## பிற் சேர்வு*

எழுதிச் செல்லும் விதியின்கை
    எழுதி எழுதி மேற்செல்லும்;
தொழுது போற்றி நின்றாலும்,
    சூழ்ச்சி பலவும் செய்தாலும்,
அழுது கண்ணீர் விட்டாலும்,
    அபயம் அபயம் என்றாலும்
வழுவிப் பின்னால் ஏகியொரு
    வார்த்தை மாற்றம் செய்திடுமோ? 114

பாரி போலக் கொடுத்தவரும்,
    பணத்தைப் புதைத்து வைத்தவரும்,
தேரின் மண்ணாய்ப் போனதலால்,
    செம்பொன் னானது அறியோமே;
ஊரில் அவர்தம் உடலையெடுத்து
    உரையும் நிறையும் காணாரே;
ஓரும் உள்ளத் துண்மையிதை
    ஊன்றி நோக்கி உணர்வாயே. 115

*இவை நூலகத்து வந்துள்ள 35, 11-ஆம் செய்யுட்களின் கருத்தை உட்கொண்ட பாடல்கள்.

# பாடல் முதற் குறிப்பு அகராதி

எண் : பாட்டு எண்


| | |
|---|---|
| அங்கவ் அயனும் | 79 |
| அரிய இனிய | 78 |
| அரிய பெரிய | 22 |
| அருணன் உதிக்கும் | 2 |
| அல்லும் பகலும் பல நூல்கள் | 48 |
| அல்லும் பகலும் விவேகத்தால் | 73 |
| அன்பு செய்யின் | 85 |
| அன்பே! யானும் | 44 |
| அன்றென் இளமைப் | 21 |
| ஆலயங்கள் | 96 |
| ஆவித் துணையே! | 90 |
| ஆழி சூழும் | 112 |
| இதற்கும் அதற்கும் | 75 |
| இந்த உலகிற் | 57 |
| இருக்கும் காலம் | 67 |
| இருந்து சென்ற | 16 |
| இருளில் ஏகும் | 28 |
| இருளின் வாயிற் | 42 |
| இல்லாப் பொருளுக் | 113 |
| இற்ற மண்ணுல் | 32 |
| இன்றைக் கின்றைக் | 20 |
| ஈசன் அருளைப் | 61 |
| ஈசா! உள்ளமிரங்கிடு | 50 |
| உண்ட வெறியில் | 39 |
| உண்ணும் உணவை | 81 |
| உண்ணும் மதுவும் | 74 |
| உயிரின் ஒளியும் | 54 |
| உருளும் உலகில் | 11 |
| உலகில் வாழும் | 70 |
| உன்னை உள்ளின் | 102 |
| ஊனுர் உடலம் | 30 |
| எங்கும் மனிதர் | 95 |
| எண்ணி எண்ணி | 100 |
| எண்ணில் சமய | 65 |
| எல்லாம் இங்கோர் | 52 |
| எல்லாம் வலியாய் | 46 |
| எழுதிச்...தொழுது கெஞ்சி | 53 |
| எழுதிச்...தொழுது போற்றி | 114 |
| என்றும் என்றும் | 99 |
| என்னைக் கேளாது | 72 |
| என்னை நோக்கி | 97 |
| ஏது ஏது மில்லாமல் | 98 |
| ஏழை ஒன்றை | 83 |
| ஏனே உலகில் | 23 |
| ஐயோ அறியா | 49 |
| ஒருகை அன்னம் | 80 |
| ஒழிந்த பாழில் | 10 |
| ஓதும் வேதம் | 104 |
| கண்ணிற் கண்ட | 38 |
| காகம் கரைதல் | 3 |
| காசு பணத்தைக் | 64 |
| காலைச் சிறுவன் | 1 |
| கான ரோஜா | 69 |
| குழியுங்குண்டும் | 88 |
| கொற்ற மன்னர் | 14 |
| சிரித்த ரோஜா | 7 |

| | |
|---|---|
| சின்னஞ் சிறியன் | 101 |
| தண்ணூர் மதியும் | 93 |
| திட்டிக் கதவு | 26 |
| துயரம் அடர்ந்து | 109 |
| தேடும் ஈசன் | 62 |
| தேரு உலகின் | 84 |
| நண்ணும் உடைமை | 110 |
| நண்ணும் உயிருக் | 103 |
| நலஞ்செய் பன்னீர் | 40 |
| நாடும் ஈசன் | 91 |
| நாடும் தெய்வம் | 94 |
| நாடும் வெற்றி | 51 |
| நின்ற துயரம் | 77 |
| நினைப்பு நீண்டு | 8 |
| நெஞ்சே! நீயும் | 43 |
| படுவெம் பாலை | 105 |
| படைத்த மண்ணும் | 35 |
| பல்நூல் கற்ற | 6 |
| பாயும் வாய்க்கால் | 18 |
| பாரி போலக் | 115 |
| பாரின் மீது | 27 |
| பாவம் செய்தோம் | 59 |
| புந்தி ஈசன் | 55 |
| புயலே யனைய | 108 |
| புலந்து விடியும் | 4 |
| பொல்லான் என்பர் | 107 |
| போற்றும் இலங்கை | 17 |
| மங்கும் மாலைப் | 76 |
| மண்டும் சமய | 66 |
| மண்ணில் உடைந்து | 33 |
| மண்ணில் மறையு | 19 |
| மண்ணிற் செய்த | [illegible] |
| மண்ணிற் பாவம் | 58 |
| மண்ணுக் கீடு | 45 |
| மண்ணை ஒருநா | 29 |
| மண்ணை மண்ண | 63 |
| மண்ணை வலமா | 25 |
| மலர்ந்து நல்ல | 5 |
| மலையில் ஏறி | 29 |
| மறந்த துள்ள | 87 |
| மன்னர் பட்ட | 14 |
| மன்ன மனிதர் | 71 |
| மன்னும் ரம் | [illegible] |
| மாண்டு போ | 68 |
| மானை வளர்த் | 60 |
| மோசக் கார | [illegible] |
| யாது சொன் | 86 |
| யாரும் சிறியர் | 47 |
| யானும் நீயும் | 13 |
| வசந்த ருதுவு | 41 |
| வந்த வந்த | [illegible] |
| வழியிற் குண்டு | [illegible] |
| வாடி நித்தம் | 82 |
| வாராய் நண்ட | [illegible] |
| வாரி வாரிக் | [illegible] |
| வீடும் பழவீ டா | 55 |
| வெய்யிற் கேத் | [illegible] |
| வைய மிசையு | [illegible] |
| வையப் பழை | 12 |